முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாஞ்
சார்பிலார்க்கு இல்லை நிலை. (குறள்.எண்.431)

பொருள்: முதலின்றி வாணிபம் செய்பவருக்கு லாபம் இல்லை அது போன்று நல்ல நட்பில்லார்க்கு இன்பம் இல்லை.

**பழனி நகராட்சி**

2018–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06–ம் நாள். வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் பழனி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 06–09–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி

**கூட்டப்பொருள்**

**1.** பழநி நகராட்சி நீர் ஆதாரங்களில் ஒன்றான கோடைகால நீர்தேக்கத்தினை விரிவுபடுத்தி குடிநீர் ஆதாரத்தினை பெருக்கவும், நகரின் உட்புறம் இரண்டு பிரதான குழாய்கள் ஏசி பைப்பில் இருந்து DI பைப்பாக மாற்றி அமைக்கவும், குடிநீர் இணைப்பு இல்லா 6697 வீடுகளுக்கு புதிய வீட்டு இணைப்புகள் ஏற்படுத்தவும், இராஜா நகரில் 2.00 இலட்சம் கொள்ளளவும் கொண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்கவும் ரூ.1500.00 இலட்சம் மதிப்பீட்டில் KFW assisted (SMIF-TN-II-2) திட்டத்தில் நிதி உதவி, மானியம் மற்றும் கடன் பெற்று பணிகள் செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்.439, நாள்.28.03.2018 –ல் அனுமதிக்கப்பட்டு பிரேரனை அனுப்பப்பட்டதில் அரசு ஆணை எண். GO.(MS) No. 72 MAWS (MA2) Department நாள்.16.07.2018–ல் கீழ்கண்ட விபரப்படி அனுமதி அளித்து திட்ட செயலாக்கத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**நிதி ஒதுக்கீடு விபரம் :-**

ரூ.கோடியில்

| நகராட்சியின் பெயர் | திட்டப் பணி | மதிப்பீட்டுத் தொகை ரூ.கோடியில் | கடன் TNUDF Under Kfw assisted (SMIF-TN-II-2) | | மானியம் Poject Sustainability Grant Fund (PSGF) Under Kfw assisted (SMIF-TN-II-2) | | நகராட்சி பங்களிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| பழனி | குடிநீர் அபிவிருத்தி திட்டம். | 15.00 | 3.00 | 20% | 10.50 | 70% | 1.50 | 10% |

மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின்படி பழநி நகராட்சி சார்பாக நிதி உதவி, கடன், மானிய நிதியினை ஒப்பமிட்டு பெற்று இத்திட்டத்தினை செயல்படுத்தி முடிக்க ஆணையருக்கு அதிகாரமளித்து தீர்மானம் நிறைவேற்றிட மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

நகராட்சி சார்பாக இத்திட்டத்தினை செயல்படுத்த ஒப்பமிட்டு நிதி உதவி மானியம் மற்றும் கடன் பெற்று பணியினை முடிக்க ஆணையருக்கு அனுமதி அளிக்கலாம்.

**2.** பழநி நகராட்சி 01–12–1988–ல் இருந்து தேர்வுநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 6.63 சதுர கி.மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் 33 வார்டுகள் அமைந்துள்ளன. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி நகராட்சியின் மக்கள் தொகை 70667 ஆகும். அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடான பழநி மலை, அடிவாரத்தில் அமைந்துள்ள திருஆவினன்குடி கோவிலுக்கு அதிக பக்தர்கள், யாத்ரீகர்கள் அதிகம் வந்து பிராத்தனை செய்யும் ஸ்தலமாகும். முருகப்பெருமானின் திருவிழாக்கலான தைப்பூசத்தன்றும், பங்குனி உத்திரத் திருவிழாவின் போதும் இந்நகர் பகுதிக்கு வெளியூர், வெளிமாநிலம் மற்றும் வெளிநாட்டில்

இருந்து ஆண்டுதோறும் 10 முதல் 20 இலட்சத்திற்கு மேல் யாத்ரீகர்கள வந்து செல்கின்றனர் மறறும் சுற்றுலாபயணிகள் மற்றும் சாதாரன நாட்களில் தினசரி 10000 முதல் 12000 பக்தர்கள் வந்துசெல்லக்கூடிய இடமாகஉள்ளது.

பழநி நகருக்கு வருகை புரியும் யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் தனியாருக்கு சொந்தமான விடுதிகள் மற்றும் தங்குமிடங்களில் தங்கவேண்டிய சூழ்நிலை உள்ளது. பழநி நகரில், 120 விடுதிகள் மற்றும் தங்குமிடங்கள் உள்ளன. பழநி நகருக்குவரும், யாத்ரீகர்கள்மற்றும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது, விடுதிகள்மற்றும் தங்குமிடங்களின் எண்ணிக்கை மிககுறைவானஅளவில் உள்ளது.இதனால் சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடத் தேவையை நிறைவு செய்ய இயலாத சூழ்நிலையில் உள்ளது

மேலும் இந்நகர் பகுதியில் உள்ள விடுதிகள் மற்றும் தங்குமிடங்களில் அதிகமான வாடகை வசூல் செய்கின்றனர். தைப்பூசத்திருவிழாக்காலங்களில் இருமடங்கு வாடகைக்கட்டணம் வசூல்செய்கின்றனர்.எனவே, இந்நகருக்குவருகைதரும் யாத்ரீகர்கள்மற்றும் சுற்றுலாபயணிகள்மிகவும் சிரமப்படுகின்றனர்.

யாத்ரீகர்கள்மற்றும் சுற்றுலாப் பயணிகள்பயன்பெறும் வகையில்பழநி நகராட்சியினால் குறைந்த வாடகைக் கட்டணத்தில் விடுதி/தங்குமிடம் வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கலாம். நகராட்சியின் மூலம் விடுதிகள் மற்றும் தங்குமிடவசதிகள் ஏற்படுத்திதர உத்தேச செலவினம் ரூ.5.00 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தினை மேற்கொள்ள நகராட்சியில் போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாததின் காரணமாக தனியார் மற்றும் நகராட்சி பங்களிப்புடன் (PPP Mode) தங்குமிட வசதிகள் ஏற்படுத்தலாம்.

இந்நகராட்சிவார்டு எண்.3, சர்வே எண். 735/1, 737– ல் இந்நகராட்சிக்கு சொந்தமான 1475 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடம் உள்ளது. அவ்விடத்தில் இந்நகர் பகுதிக்கு வந்து செல்லும் யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் பயன்பெறும் வகையில் தங்கும் விடுதிகள் அரசுமற்றும் தனியார் பங்களிப்புடன் ( PPPMode) அமைப்பதற்கு வெளிசந்தையில் ஒப்பந்தப்புள்ளிகோரவும், பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய தொழில்நுட்ப சூர்ந்தாய்வு குழு அமைக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 06–09–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி